26.08.2025

O.S.No. 288/2022

DW1- லோகநாதபாண்டியன் – த/பெ.செல்லப்ப நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.08.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. வாதியின் வீடு மேற்குபக்கமும், என் வீடு கிழக்கு பக்கமும் உள்ளது என்றால் சரிதான்.

2. எனது வீட்டிற்கு தெற்கு பக்கமாக செல்லக்கூடிய கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான்.

3. இருவரின் வீடுகளும் கட்டப்பட்ட காலத்தில் இருந்தே ஓட்டு வீடாக இருந்தது என்றால் சரிதான். தற்போது வரை கிழக்கு பக்கமாக உள்ள என் வீடு ஓட்டு வீடாக உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீட்டிற்கு கதவு எண் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு உள்ளது.

4. மின் இணைப்பின் மீட்டர் பெட்டியானது ஓட்டுக்கூரை வீட்டில் உள்ளது. அந்த வீட்டின் மின் இணைப்பு ரசீது தான் பி.வா.சா.ஆ.3 என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆனது மேற்படி ஓட்டுவீட்டிற்கான வீட்டுவரி ரசீது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆனது மேற்படி ஓட்டுவீட்டிற்கான தண்ணீர் வரி ரசீது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ஆனது

மேற்படி ஓட்டு வீட்டிற்கான குடிநீர் இணைப்பின் அடையாள அட்டை என்றால் சரிதான்.

6. என் வீட்டிற்கு வடக்கு பக்கம் கான்கிரீட் போட்ட புதிய வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு எனக்கு பாத்தியப்பட்ட வீடு. அதை கட்டுவதற்கு குலசேகரன்பட்டி பஞ்சாயத்தில் இருந்து 2020ம் ஆண்டு நான் அனுமதி பெற்றுள்ளேன்.

7. வீடு கட்டுவதற்கான அனுமதி உத்தரவு என் வசம் தான் உள்ளது. அதை என் தரப்பில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

8. நான் பட்டா கொடுத்து வீடு கட்டுவதற்கான அனுமதி விண்ணப்பம் அளித்தேன். நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் உண்மையில் அனுமதி இருந்திருந்தால் அனுமதி உத்தரவு மற்றும் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் என் பெயரில் எந்த வித பட்டாவும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது தபசில் சொத்திற்கான கணினி நத்தம் பட்டா. மேற்படி பட்டவானது வா.சா.ஆ.2 ஆக பி.வா.சா.1 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

9. வா.சா.ஆ.2 பட்டவானது வாதியின் தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான் அது போலியாக தயார் செய்யப்பட்டது. என் பெயரில் உள்ள பட்டாவை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

10. என் தகப்பனாருடன் பிறந்த 3 நபர்களும் பாகம்

பிரித்துக்கொள்ளும் போது தபசில் சொத்து என் தகப்பனார் பாகத்திற்கு கிடைத்துள்ளதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பத்திரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அது என் பெரியப்பா மகன் வசம் உள்ளது. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் கூறுவது போல் எந்த பாகமும் ஏற்படவில்லை என்றும் அதற்காக எந்த பாக அட்டவணையும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

11. தபசில் சொத்து வாதிக்கு பாத்தியமானது என்றும் அவரது தந்தை பெயரிலேயே பட்டா உள்ளதால் என் கட்சி நிராகரிக்கப்பட்டு வாதியின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.